DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC, 417/2022
Deposition of witness for PW.9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு. சுப்பிரமணியன் | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.03.2023

(1வது எதிரி இறந்து விட்டார். 2,3 , 4 எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் 2,3,4 தரப்பில் குவிமுச.317 பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது))

**முதல் விசாரணை**

நான் தற்போது சாமிநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். வயதான காரணத்தினால் வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 எனது சம்மந்தி ஆவார். எதிரிகளை தெரியும். கடந்த 09.08.2013ம் தேதி கருப்பசாமி மற்றும் சர்க்கரை வீடுகளை எதிரிகள் அனைவரும் சேர்ந்து ஜேசிபியை வைத்து இடித்துவிட்டார்கள். மூன்று நாட்கள் கழித்து போலீசார் வந்து சம்பவத்தில் பயன்படுத்திய ஜேசிபி வாகனத்தை எனது மற்றும் முத்துக்குமார் முன்னிலையில் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தார்கள். அத்தாட்சியில் நானும் , முத்துக்குமாரும் கைது செய்தோம். அத்தாட்சி அ.சா.ஆ.3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

அ.சா.1 எனது மைத்துனர் ஆவார். அ.சா.1ன் தங்கையை நான் திருமணம் செய்துள்ளேன். அ.சா.1 சம்பவம் தொடர்பாக மல்லி காவல்நிலையம் செல்லும் போது நானும் அவருடன் சென்றேன் என்றால் சரிதான். அத்தாட்சியில் மல்லி காவல்நிலையத்தில் வைத்து தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். எழுதப்படாத பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC, 417/2022
Deposition of witness for PW.8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு. அழகுசாமி | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.03.2023

(1 வது எதிரி இறந்து விட்டார். 2,3 , 4 எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் 2,3,4 தரப்பில் குவிமுச.317 பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது))

**முதல் விசாரணை**

நான் தற்போது சாமிநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். ஜோதி பட்டாசு தொழிற்சாலையில் வாட்சுமேனாக வேலை செய்து வருகிறேன். அ.சா1 ஐ தெரியும். எதிரிகளை தெரியும். அ.சா.1 மகன்களான கருப்பசாமி, சர்க்கரை ஆகியோர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். எதிரிகள் அ.சா.1 மற்றும் அவரது மகன்கள் இருக்கும் வீட்டை காலி செய்யுமாறும் மாறி மாறி கூறிவந்தார்கள். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு பாண்டி வத்திராயிருப்பில் திருமணம் முடித்து அங்கிருக்கும் அடியாட்களை கொண்டு வந்து பீர் பாட்டில் மற்றும் பிராந்தி பாட்டில் வைத்து கருப்பசாமி மற்றும் சர்க்கரை வீடுகளில் வாசலில் எறிந்து சேதப்படுத்தினாரகள். பின்னர் சுப்பிரமணியத்தேவர் அவரது குழந்தைகள் வீட்டை காலி செய்துவிட்டு சென்றுவிட்டார்கள். குடியிருந்த வீட்டைச் சுற்றி கம்பி வலை போட்டு வைத்திருந்தார்கள். கடந்த 09.08.2013 ம் தேதி அன்று காலை 11.45 மணி அளவில் சின்னமுணியாண்டி, திருபாதி , பாண்டி மற்றும் ஜேசிபி ஓட்டுநர் தர்மா ஆகியோர் சேர்ந்து சுப்பிரமணியத்தேவர் வீடுகளில் மேற்கே உள்ள வீட்டை இடித்து சேதப்படுத்தினார்கள். நான் உடனே ஓடிவந்து எதிரிகள் வீட்டை இடிப்பதை பார்த்தேன். அப்போது சுப்பிரமணியத்தேவர் மற்றும் அவரது குடும்பத்தார்கள் சேர்ந்து வீட்டை இடிக்காதிர்கள் என்று சத்தம் போட்டார்கள். அதற்கு ஜேசிபி ஓட்டுநர் இந்த இடத்தை விட்டு போறீர்களா இல்லை இடித்து தள்ளவா என்று ஜேசிபியை வைத்து இடிக்க

வந்தார். சுப்பிரமணியத்தேவர் மற்றும் அவரது குடும்பத்தார் பயந்து கொண்டு அங்கிருந்து சென்று விட்டார்கள். மேற்படி சம்பவத்தை ஊர் மக்கள் அனைவரும் பார்த்தார்கள். இது சம்மந்தமாக சுப்பிரமணியத்தேவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விவரத்தை தெரிந்து கொண்டேன். காவலர்கள் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

சாமிநத்தம் கிராமமானது திருவில்லிபுத்துார் சிவகாசிக்கு தெற்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். சம்பவ இடமானது சாமிநத்தத்திலிருந்து வேண்ராயர்புரத்திற்கு கிழமேல் ரோட்டிற்கு வடக்கு பக்கம் சம்பவ இடம் உள்ளது . எனது வீடு சாலைக்கு தெற்கு பக்கம் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து ஒரு பர்லாங்கு தாண்டியுள்ள இடத்தில் சுப்பிரமணியன் குடியிருந்து வருகிறார். சுப்பிரமணியத்தேவர் மற்றும் அவரது உறவினர்கள் எப்போது சம்பவ இடத்தைவிட்டு மற்றொரு வீட்டிற்கு குடியிருக்க சென்றுள்ளார் என்றால் 07.08.2013 ம் தேதி. அ.சா.1 சுப்பிரமணியத்தேவரை எனக்கு 20 வருடங்களாக தெரியும். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கு இடையே உள்ள நிலப்பிரச்சினை எனக்கு எப்பொழுது என்று தெரியும் என்றால் 20 வருடங்களுக்கு முன்பிலிருந்து தெரியும். நான் சம்பவம் இடம் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் ஆர்.டி.ஓ அலுவலகத்தில் நடைமுறைகள் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. பிரச்சனைக்குரிய இடத்தில் எத்தனை வீடுகள் இருந்தது என்றால் 3 வீடுகள் இருக்கும். மற்ற இரண்டு வீடுகளையும் எதிரிகள் அந்த வீட்டு உரிமையாளர்களிடமிருந்து எழுதி வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற பிறகும் நான் எனது ஊரில் தான் இருந்தேன். வழக்கு சம்மந்தமாக காவலர்கள் என்னை விசாரித்தார்கள் என்றால் 12.08.2013 ம் தேதி. 20.11.2013 ம் தேதி தான் காவலர்கள் என்னை விசாரித்தார்களா என்றால் 12.08.2013 ம் தேதி தான் விசாரித்தார்கள். 12.08.2013 ம் தேதி காவலர்கள் என்னை விசாரித்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC, 417/2022
Deposition of witness for PW.7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு. சக்திவேல் | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.03.2023

(1 வது எதிரி இறந்து விட்டார். 2, 3, 4 எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் 2, 3, 4 தரப்பில் குவிமுச.317 பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது))

**முதல் விசாரணை**

நான் தற்போது வடபட்டியில் குடியிருந்து வருகிறேன். காலண்டர் தயாரிக்கும் தொழில் செய்து வருகிறேன். அசா.1–ஐ தெரியும் எதிரிகளை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு ஈஞ்சார் விளக்கிலிருந்து மதியம் சாப்பாடு வாங்குவதற்காக நான் சாமிநத்தம் செல்லும் போது எனது மகள் வீட்டின் அருகே கூட்டமாக இருந்தார்கள். நான் போய் கேட்டதற்கு சுப்பிரமணியத்தேவர் வீட்டை சின்னமுணியாண்டி, பாண்டி இடித்துவிட்டதாக கூறினார்கள். அந்த இடத்தின் அருகே சின்னமுணியாண்டியும், பாண்டியும் இருந்தார்கள். இது சம்மந்தமாக அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் தெரியும், இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை.